# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No. 37 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 19 | நாள் | : | 12.12.2024 |
| பெயர் | : | செல்வக்குமார் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of December 2024.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது இலத்தூர் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சிவகிரி காவல் நிலையத்தில் 09.09.2019 அன்று 20.15 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது சிவகிரி தாலுகாவை சேர்ந்த குருசாமி மகன் பரமசிவன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலை குற்ற எண் 393/2019 பிரிவு 174 குவிமுச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையும், புகார் மனுவினையும், நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, உதவியாளர் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-13. என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

09.09.2019 அன்று இரவு 8.15 மணிக்கு உதவி ஆய்வாளரும், ஆய்வாளரும் நிலையத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் என்னை விட மூத்த தலைமைக் காவலரும் காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் சரிதான். சிறப்பு உதவி ஆய்வாளர் இருந்தாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் கூறுவது பொய் என்றும், அந்த நேரத்தில் சிறப்பு உதவி ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும், மூத்த தலைமைக்காவலர் நிலையத்தில் இருந்தார்கள் என்றும், இந்த வழக்கை என் மூலமாக பதிவு செய்வதில் புலனாய்விற்கு வசதியாக இருக்கும் என்பதால், என்னை பயன்படுத்தி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு மூத்த அதிகாரிகள் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சந்தேக மரணம் என்ற புகார் வழக்கில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சட்ட அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. புகார் மனுவை பெற்றதும் நான் உதவி ஆய்வாளரிடம் தகவல் தெரிவித்தேன். உதவி ஆய்வாளர் தாமதமாக நிலையம் வந்தார். ரோந்து பணியில் இருந்தார். எப்போது வந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மனு விபரங்களை அவரிடம் தெரிவித்தேன். அவர் அறிவுரையின் பேரில் வழக்கை பதிவு செய்தேன். புகார் மனுவானது சம்பவம் நடந்து 8.30 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 8.30 மணிநேரம்

காலதாமத்திற்கு காரணம் புகாரில் கூறப்படவில்லை. புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவை எழுதியவர் யார் என்று எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையை கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் தட்டச்சு செய்யவில்லை, யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்று முதல் தகவல் அறிக்கையில் கூறப்படவில்லை என்றால் சரிதான். 09.09.2019 அன்று நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டதாக காலம் எண் 15 ல் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருது நீதிமன்றத்திற்கு நடந்து சென்றலாம் சுமார் 5-10 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான். 2 அல்லது 3 நிமிடத்தில் இரண்டு சக்கர வாகனத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். 10.09.2019 தேதி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தினை அடைந்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான், அதில் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காலம் எண் 13 ல் உதவி ஆய்வாளர் யார் மூலம் எத்தனை மணிக்கு கூறப்படவில்லை என்றால் சரிதான். அதைபோலவே நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் யார் மூலம் அனுப்பி வைக்கப்படவில்லை என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் சந்தேக மரணம் இருப்பதாக கூறப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் என் அண்ணன் வேலுச்சாமி என்னிடம் என் அண்ணன் மருமகள் முனீஸ்வரிதான் இறப்பிற்கு முன்பு கையை பிடித்து அழைத்து சென்றார் என்று கூறப்படவில்லை என்றால் சரிதான்.

எப்போதும் என் மகளுக்கு சிறிய காயம் ஏற்பட்டால், கையை அந்த இடத்தில் வைத்து சொல்வாள் என்று புகாரில் கூறப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொனன் இடத்தில் நிலையத்தில் இல்லை என்றும், அசா.1 புகார் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்த கவீனாவின் சடல கூராய்விற்கு பின்னர்தான் எங்கள் காவல்நிலைய உயர் அதிகாரிகள், மற்றும் அ.சா.1 ன் உறவினர்கள் கலந்துபேசி தயாரிக்கப்பட்ட புகார் மனுவிற்கு ஏற்ப முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் பழனிச்சாமி வீட்டின் வைத்து புகாரில் கண்டவாறு குழந்தை கவீனாவிற்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. குழந்தை கவீனா புகார்தாரர் வீட்டில் வைத்து, கனமான பொருளை இழுத்து விளையாடும்போது சரிந்து விழுந்து அதன் காரணமாக மூச்சு திணறல் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உண்மையான புகார் மனுவை மறைத்து பின்னிட்டு உயர் அதிகாரிகளின் விருப்பத்திற்கு ஏற்ப புகார் மனு பெறப்பட்டு அதன் அடிப்படையில் என்னை பயன்படுத்தி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சந்தேக மரணம் குறித்த வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை துரித தபால் மூலம் அனுப்ப வேண்டும் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2024.12.12 17:02:55 +0530